# லெப். டைகர் தேவன்

மட்டக்களப்புப் பிராந்தியத்தில் தமிழ்தேசிய வாதத்தைக் கட்டி எழுப்புவதில் காசி அண்ணாவுக்கு எந்தளவுக்குப் பங்கு இருந்ததோ அதேயளவு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைக் கட்டி வளர்த்ததில் ஜெயம் (வள்ளுவன்) அண்ணருக்குண்டு.

காசி அண்ணாவின் தம்பியான இவர்தான் அவரது 'அந்தரங்கக் காரியதரிசி' என்று சொல்லலாம். காசி அண்ணாவின் செய்திகளை அவரது நம்பிக்கைக்குரியவர்களிடம் சேர்ப்பது- காசி அண்ணா எங்கு செல்லவேண்டுமோ அங்கெல்லாம் அவரைக் கூட்டிக் கொண்டு செல்வது.... இன்னும் இன்னும் சுருங்கச் சொன்னால் அவரது நிழல்போல வாழ்ந்தவர். இதனால் இந்தப் பிராந்தியத்தில் விடுதலை உணர்வுள்ளர்கள் யார் என்பதை அவர் இனங்கண்டிருந்தார். அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம், நம்பிக்கையான இலட்சியத்தில் உறுதியானவர்களை அடித்தளமாகக் கொண்ட இயக்கமாக எமது இயக்கத்தை உருவாக்கப் பாடுபட்டார்.

அத்துடன் முன்னர் இவர் மலேரியாத் தடுப்பு உத்தியோகத்தராகவும் இருந்தமையால் பொதுமக்களுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பமும் இவருக்கிருந்தது. இந்த அறிமுகங்களையெல்லாம் விடுதலைப் போராட்டத்தை வளர்ப்பதற்குப் பயன்படுத்தினார் அவர்.

ஆகவே, மட்டக்களப்புப் பிராந்தியப் போராளிகளுக்கு இவரது அருமை நன்றாகத் தெரியும். எந்த நெருக்கடியிலும், இவரைப் பாதுகாக்க வேண்டும்- இவரது பாதுகாப்பே இயக்கத்தினரைப் பாதுகாக்க உதவும் என்பது அவர்களது கருத்து.

இவரைப் பாதுகாப்பதற்கு தகுதியான ஆள் யார்?

இந்திய இராணுவம் புலிகளைத் தேடி மோப்பமிட்டுக் கொண்டிருந்த அந்த நெருக்கடியான காலகட்டத்தில் நீர்வழி, நிலவழி இரண்டிலும் திறமையாகச் செயற்படக்கூடியவர் யார்?

இறுதியாக ஒரு முடிவுக்கு- வந்தனர். இப்பணியைச் செய்யக்கூடியவன் 'டைகர் தேவர்' தானென்று. ஏனைனில் லக்ஸ்மனை காப்பாற்றிய சம்பவம்- அது மயிர்கூச்செறிய வைக்கக்கூடியது.

பிரஜைகள் குழுவின் பெயரால் சிறிலங்கா காவல் துறையுடன் தொடர்பு கொண்டு பின்னர் நாளாவட்டத்தில் தமிழ்த்துரோகியாக மாறிவிட்ட சாம்-தம்பிமுத்து என்பவருக்கு மரணதண்டனையை நிறைவேற்றும் பொறுப்பு லக்ஸ்மனிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவன்தான் இந்தியப் படையினரைக் கனவிலும் பயமுறுத்திக் கொண்டிருந்தவன். முகாமை விட்டு வெளியே செல்லும் சமயங்களிலெல்லாம், அவர்கள் கடவுளைக் கும்பிட்டு விட்டே செல்வார்கள். அங்கு கைதியாக இருந்தவர்கள் ஒருநாள் இதற்கான காரணத்தை அவர்களிடம் வினவினர். அதற்கு அவர்கள் அளித்த பதில் 'லக்ஸ்மன் பார்ட்டியை எதிரே சந்தித்து விடக்கூடாது' என்றே தாம் கும்பிடுவதாகக் கூறினார்கள்.

இப்படியாக இந்தியப் படையையே கலக்கிக் கொண்டிருந்த 'லக்ஸ்மனின்' குழுவில்தான் இவனும் ஒருவனாக இருந்தான்.

நாற்புறமும் வாவியினால் சூழப்பட்ட புளியந்தீவு என அழைக்கப்படும் பகுதியே மட்டக்களப்பு நகரம். இதற்குள்தான் இருந்தது துரோகி சாம்-தம்பிமுத்துவின் இல்லம். தீவுக்கு வரும் இரு பாதையின் வழியிலும் படைமுகாம்கள் இருப்பதால் 'புலிகள் தன்னை நெருங்க முடியாது' என அவர் கருதியிருந்தார். ஆனாலும், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்த சில தேசத்துரோகிகள் இவரது வீட்டைக் காவல் புரிந்து வந்தனர். எனினும், புகைபோக முடியாத இடம் எல்லாம் புலி போகுமல்லவா? எப்படியோ லக்ஸ்மன் அந்த வீட்டினுள்ளே நுழைந்து விட்டான்.

சாம்-தம்பிமுத்துவின் எதிரே பிஸ்ரலுடன் லக்ஸ்மன், ஆனாலும் பிஸ்ரல் காலை வாரிவிட்டது. ஒன்று இரண்டு....மூன்று ஸ்ரக் ஆகிவிட்ட பிஸ்ரலிருந்து திரும்பத் திரும்ப ரவைகளை வெளியேற்றி விட்டு சுட முயற்சித்தான் லக்ஸ்மன்.... ஏமாற்றம்தான்.

இதேவேளை பின்பக்கத்தில் வந்த ஒரு தேசத்துரோகி லக்ஸ்மனைத் தாக்கினான். லக்ஸ்மனது கைமுறிந்து விட்டது. அவனும் கீழே விழுந்து விட்டான். அவனைக் கட்டி இந்தியப் படையிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தனர் அவர்கள். தகவல் அறிந்த இந்தியப்படையினரும் அப்பகுதியை முற்றுகையிட்டனர்.

இந்த நேரத்தில் தான் கையில் ஏ.கேயுடன் உள்ளே நுழைந்தான் டைகர் தேவன். அவனது ஏ. கே. தேசத்துரோகிகளை எச்சரித்தது. அவ்வளவுதான் அனைவரும் உயிருக்கு அஞ்சி ஓடினர். இவன் லக்ஸ்மனைத் தோளில் போட்டுக் கொண்டு ஓடினான்.

நாற்புறமும் வாவியால் சூழப்பட்ட




எமக்குப் பாதகமான இயற்கை அமைப்பு, இதற்குள் இவர்களுக்கென்றே போடப்பட்ட முற்றுகை, ஆனாலும் எப்படியோ அவர்கள் கண்ணில் படாதவாறு லக்ஸ்மனைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்து ஒரு தோணியில் ஏற்றினான் டைகர் தேவன். நீரைக்கிழித்துக் கொண்டோடிய அந்தத் தோணி துடுப்பினாலும் புயல் வேகத்தை உருவாக்கக்கூடியவர்கள் புலிகள் என்பதை நிரூபித்தது.

கரைக்கு வந்த இந்தத் தோணியிலிருந்து லக்ஸ்மனை இறக்கும் போது, அவனுக்கு ஆறுதல் சொன்னான். "எப்பிடியும் இவனைப் போடலாம் மச்சான்... கொஞ்ச நாள் போக நீயே இவனைப் போடுவாய் பார்"

காலம் இவனது கூற்றை நிரூபித்தது, ஜெயம் அண்ணருக்குப் பாதுகாப்பாக இவன் இருந்த வேளையில்தான் அந்தச் சந்தர்ப்பம் நிகழ்ந்தது... தாழங்குடாவில் இவர்கள் தங்கி இருக்கும் இடத்தை யாரோ காட்டிக்கொடுத்து விட்டார்கள். கிட்ட நெருங்கியதும்தான் இந்தியப் படையைக் காண முடிந்தது இவனால். எஸ். எல். ஆர். களை இவனது ஏ. கே. கலவரப்படுத்தியது.

"நான் உயிரோடு இருக்கும் வரை ஜெயம் அண்ணரை நெருங்க விடமாட்டேன்" என்ற செய்தியைத் தனது ஏ. கே. மூலம் சொன்னான் இவன்.

சில வினாடிகளில் இவனது ஏ. கே. மௌனமாகியது, கூடவே இவனும்... அதன் பின்னர் தான் ஜெயம் அண்ணரின் வாய் சயனைட்டின் சுவையை அறிந்தது.

மட்டக்களப்புப் படுவான்கரைப் பகுதி- இது. கூத்துக்கலைக்குப் பெயர் போனது. கூத்தாடுபவர்களும், கூத்துப் பயிற்சி பெறுபவர்களும் மாலை வேளையில் உடுக்கடித்துப் பாடுவதைக் கேட்கலாம்.

இப்பகுதியில் தான், 1985 ம் ஆண்டளவில் இவன் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டுக்கோண்டிருந்தான். இந்தப் பகுதியிலுள்ள பண்டாரியாவெளி நாகதம்பிரான் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு ஆண்டுதோறும் நடைபெறும் பொங்கல் நாளில் தமது நேர்த்திக் கடன்களைச் செலுத்த ஏராளமான பக்தர்கள் கூடுவர். மட்டக்களப்பு நகரமே ஆற்றைக் கடந்து பண்டாரியாவெளிக்குவந்துவிடும். இரவைப் பகலாக்கும் வெளிச்சத்துடன் நடைபெறும் அந்தப் பொங்கல் விழாவில், ஆலய ஒலிபெருக்கியில் பொதுமக்கள் அறிவித்தல் செய்வதற்கு இரண்டு ரூபா கட்டணமாக அறவிடப்பட்டது. அவ்வாறு இரண்டு ரூபா பெற்றுக் கொண்டு ஒரு அறிவித்தலை ஒலிபெருக்கினார்கள். 'மட்டுநகர் புதூரைச் சேர்ந்த தேவனை நீடூழிகாலம் வாழ்கவென பண்டாரியாவெளி நாகதம்பிரானை வேண்டி வாழ்த்துகின்றார்கள் அம்பிளாந்துறையைச் சேர்ந்த..."

இந்தக் காட்சிகள் இன்று நாம் இழந்து போனவைதான். இவை மட்டுமல்ல, கல்லடிப்பாலத்தில் நாம் கேட்கும் பாடும் மீன் இசை, படுவான் கரையின் கூத்திசை, அதிகாலையில் சித்தாண்டியில் கேட்கும் அவல் இடிக்கும் ஓசை, இவையெல்லாமே நாம் இழந்து போனவை.

இவற்றுக்குப் பதிலாக அவலஓசைகளும், அந்த அவலங்களுக்குக் காரணமானவர்களின் முகாம்களுக்கு விஜயம் செய்யும் பிக்குமாரின் பிரித் ஓசைகளுமே ஓங்கி ஒலிக்கின்றன.

இந்நிலையை மாற்றும் இளைய தலைமுறைப் புலிகளின் துப்பாக்கி ஒலி பரவலாக அதிகரித்து வருகிறது. அன்று இவனுக்கு வாழ்த்துச் சொன்ன நாகதம்பிரான் கோயில் ஒலிபெருக்கி விரைவில் இவனுக்கு அஞ்சலி செய்யும். அந்த நாளில் இந்த மண்ணில் சுதந்திரம் நிலவும் என்பது திண்ணம்.

# லெப்.கேணல் ஜஸ்ரின்

போர்முனைக்குச் சென்றவர்கள் வென்றதுண்டு வந்ததில்லை" என்பார்கள். இதை ஜஸ்ரினும் படித்திருந்ததினாலோ என்னவோ இறுதியாக மணலாற்றுச் சண்டைக்குச் செல்வதற்கு முன்னர் தனது தாயை அவன் சந்தித்தபோது "அம்மா, நான் சண்டைக்குப் போறன். ஆனால் நான் உயிரோடை திரும்பி வர மாட்டன்" என்று கூறிவிட்டுச் சென்றான். கண் தெரியாத அந்தத் தாயிடம் அதனைத் தெரிவித்துவிடவேண்டும் என்று அவனது உள்ளுணர்வு அவனைத் தூண்டியுள்ளது. தாய்க்கு மகனாகச் செய்யவேண்டிய கடமையைவிட மண்ணின் மகனாக அவன் ஆற்றவேண்டிய கடமை அவனுக்குப் பெரிதாகத் தெரிந்தது.

1984 ஆம் ஆண்டு காலத்திலிருந்து இந்த மண்ணை முத்தமிடும்வரை பல்வேறு வகைகளில் போராட்டத்தின் வளர்ச்சிக்காகப் பங்காற்றியவன் அவன். பயிற்சி முகாம் பொறுப்பாளராக - வெடிபொருள்கள் தயாரிக்கும் குழுவுக்குப் பொறுப்பாக - குழுத்தலைவனாக, இறுதியில் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவில் 3வது தளபதியாக இவ்வாறு இவன் ஆற்றிய பங்கு அளப்பரியது.

பயிற்சி முகாமில் சிலர் தனித்துவமாகத் தெரிவார்கள். பல நூறு பேர்களுக்குள் அவர்களது ஆறறல் தனித்து மின்னும். அவ்வாறு தமிழக மண்ணில் அமைந்திருந்த எமது ஐந்தாவது பயிற்சி முகாமில் இனங்காணப்பட்ட போராளிகளில் ஒருவன்தான் ஜஸ்ரின். இவனது திறமைகளை அவதானித்த அந்தப் பயிற்சிமுகாமை நடத்திய ராதா இவனைத் தன்னோடு மன்னாருக்குக் கூட்டிச் சென்றார். மன்னார் மண்ணில் பயிற்சி முகாமமைத்து போராளிகளை உருவாக்கும் பொறுப்பு இவனுக்கு வழங்கப்பட்டது. தலைவரிலிருந்து பொன்னம்மான் கற்றதை, பொன்னம்மானிலிருந்து ராதா கற்றதை, ராதாவிலிருந்து ஜஸ்ரின் கற்றதை மொத்தமாக மன்னார் மாவட்டப் போராளிகள் கற்றுக் கொண்டனர்.

மன்னார் மண்ணிலிருந்து 25 இராணுவம் பலி, 50 இராணுவம் பலி என்றெல்லாம் செய்தி வரும்போது இவன் தனது தோழர்களிடம் "பார் மச்சான், என்ரை பெடியள் எப்படிச் சண்டை பிடிக்கிறாங்கள் எண்டு" என்று சொல்லி மகிழ்ச்சியடைவான்.ஒரு தந்தையின், ஒரு ஆசிரியனின் நிலையிலிருந்து பெறும் மகிழ்ச்சியல்லவா அது! வரண்ட பூமி என இனங்காணப்பட்ட மன்னார் தாக்குதலில் மட்டும் வளமான பூமி என இனங் காணப்பட்டது. விக்ரரின் காலத்திருந்தே அந்தப் பெயர், அதைத் தொடரச் செய்ததில் கணிசமான பங்கு ஜஸ்ரினுக்கு உண்டு.

போர்த் திட்டமிடுதல், பயிற்சி அளித்தலில் மட்டுமல்ல, பல்வேறு வகையான ஆற்றல்களும் மிக்கவனாகவே இனங்காணப்பட்டான். இவன் ஒரு சிறந்த நடிகன். பல்வேறு வகையான பாத்திரங்களில் தோன்றி தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தியவன்



இவன். இவனோடு பயிற்சி முகாமில் பயிற்சியெடுத்தவர்கள் கிறிஸ்மஸ் தாத்தாவாக இவன் துள்ளி ஆடிய அழகையும், ஒரு கலைநிகழ்ச்சியில் "ஏக் தோ தீன்" என்ற கிந்திப் பாடலுக்கு உடலை அசைத்து அசைத்து ஆடிய ஆட்டத்தையும் பசுமையான நினைவுகளாக நினைவுகூருகின்றனர். மாறுபட்ட முகவடிவங்களை வெளிப்படுத்துவதில் வல்லவன் இவன் என்பதில் இவனைத் தெரிந்த எவருக்கும் இரண்டாவது கருத்து இருக்க முடியாது.

அதே போலவே சமையல் செய்வதிலும் நளன்தான். அத்துடன் உணவு சமைக்கும் முறைபற்றி இவன் விபரிக்கும் பாங்கு -- அது அலாதியானதுதான் -- இப்படி -- அப்படி -- என்று இவன் அபிநயத்தோடு சமையல் செய்யும் முறையைக் கேட்பவருக்கே நாவில் எச்சில் ஊறும். தான் தங்கியிருக்கும் முகாமில் கூட இருப்பவர்களுக்கு விசேடமான உணவு வகைகளை தயாரித்துக் கொடுப்பது இவன் வழக்கம்.

இவனுக்கு தமிழுடன் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளைச் சரளமாகப் பேசும் ஆற்றலுமிருந்தது. எப்போதும் மீசையில்லாமல் நன்கு சவரம் செய்யப்பட்ட முகத்துடன் காணப்படும் இவன் சிங்களம் பேசும்போது அசல் சிங்களவனே நம்பமாட்டான் இவன் தமிழனென்று. பயிற்சி முகாமில் இவன் ஏற்ற பாத்திரங்களிலொன்று சிறிலங்கா இராணுவ அதிகாரியாகத் தோன்றியமை. அதை இவனுடன் பயிற்சியெடுத்த போராளிகள் மறக்கவே மாட்டார்கள்.

மிக இளகிய மனம், இரக்க சுபாவமுடைய இவன் தோழர்களுடன் முரண்டு பிடிப்பதுமுண்டு. பின்னர் தானே தணிவான், கண்ணீர் விட்டு அழுவான். சண்டை பிடித்தவர்களுடன் முன்னதைய விட இன்னும் நன்றாகப் பழகுவான். "இதுதான் ஜஸ்ரின்" என்று அவர்களுக்குத் தெரியுமாதலால் அவர்களும் ஒன்றும் பேசுவதில்லை.

தொடர்ச்சி 9ம் பக்கம்.....